செய்தி வெளியீடு எண்: 38 நாள்: 29.06.2021.

**தேனி மாவட்டம்.**

**ஆண்டிபட்டி வட்டாரத்திற்குட்பட்ட சமத்துவபுரம் பகுதிகளில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க.வீ.முரளிதரன், இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று மேற்கொள்ளபட வேண்டிய சீரமைப்பு பணிகள் குறித்து, பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்:-.**

**********

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டாரத்திற்குட்பட்ட பிச்சம்பட்டி மற்றும் தேக்கம்பட்டி ஆகிய பகுதிகளில் உள்ள சமத்துவபுரத்தில் மேற்கொள்ளபட வேண்டிய சீரமைப்பு பணிகள் குறித்து இன்று (29.06.2021) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க.வீ.முரளிதரன், இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவித்ததாவது,

தமிழக அரசு ஏழை எளியோர்களின் நலன் கருதி, அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, கோரிக்கைகளுக்கு முன்பாகவே, பல்வேறு நல திட்டங்களை அறிவித்து, அதன்மூலம் அவர்களை பயன்பெற செய்து வருகிறது. நலத்திட்டங்கள் மட்டுமின்றி, வளர்ச்சி பணிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்தும் பொருட்டு, தமிழகம் முழுவதும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், பொதுமக்களின் அடிப்படை தேவைகளான, உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இருப்பிடம் ஆகியவைகளை அடித்தட்டு மக்களுக்கு கிடைக்கப்பெற செய்யும் வகையில், திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தபட்டு வருகிறது. அதில் ஒன்றான நிலையான இருப்பிடத்தினை ஏழை எளியோர்களுக்கு வழங்கும் பொருட்டு, ஊராட்சி பகுதிகளில் வசிக்கின்ற மக்களுக்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில், முதலமைச்சரின் சூரிய ஒளியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம், நகராட்சி மற்றும் பேரூராட்சிப்பகுதியில் வசிக்கின்ற நகர்ப்புற மக்களுக்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் அனைவருக்கும் வீடு கட்டும் திட்டம் போன்ற திட்டங்கள் மட்டுமின்றி, வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் மக்கள் பயன்பெறும் வகையில் சமத்துவபுரம் என்ற ஒரு பகுதியை ஏற்படுத்தியும், அதன் மூலம் தகுதியான நபர்களை பயன்பெறச் செய்து வருகிறது.

அதன்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றவுடன், அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில் ஒன்றான, தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் உள்ள சமத்துவபுரத்தினை சீரமைத்து புதுப்பிக்கப்பட்டும், புதிதாகவும் சமத்துவபுரத்தினை உருவாக்கப்படும் என்ற அறிவிப்பின்படி, தேனி மாவட்டம் முழுவதும் உள்ள சமத்துவபுரம் பகுதிகளில் கட்டப்பட்டுள்ள வீடுகளில் மேற்கொள்ள வேண்டிய சீரமைப்பு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, பணிகள் மேற்கொள்ளப்படும் அடிப்படையில், இன்றைய தினம் ஆண்டிபட்டி வட்டாரத்திற்குட்பட்ட பிச்சம்பட்டி மற்றும் தேக்கம்பட்டி ஆகிய பகுதிகளில் உள்ள சமத்துவபுரத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.